# அன்னை பூபதி
# தமிழ்க் கலைக்கூடம்

## தமிழ்மொழி
## ஆண்டிறுதிப் பரீட்சை
## ஆனி 2012

## ஆண்டு 7

பெயர்: ______________________

வகுப்பு: ______________________

புள்ளிகள்: ______________________

______________________ ______________________

(ஆசிரியர் ஒப்பம்) (பெற்றோர் ஒப்பம்)

## ① மிகப்பொருத்தமான விடையைத் தெரிந்து அதன் கீழ்க் கோடிடுக.

1. தமிழ் நெடுங்கணக்கில் உள்ள எழுத்துகளின் எண்ணிக்கை
   1. 30 2. 18 3. 12 4. 247

2. சுட்டெழுத்துகளாக அமையக் கூடிய எழுத்துக் கூட்டம்
   2. எ, ஏ, யா 2. அ, இ, உ 3. ஏ, ஓ, உம் 4. அர், அன், அள்

3. இயல், இசை, நாடகம் மூன்றையும் சேர்த்துக் கூறும் ஒரு சொல்
   1. முந்நாடகம் 2. முத்தமிழ் 3. மூவிலக்கணம் 4. முத்தொடர்

4. 'க் ச் ட் த் ப் ற்' எழுத்துக் கூட்டத்தின் வகைப்பெயர்
   1. தமிழினம் 2. வல்லினம் 3. மெல்லினம் 4. இடையினம்

5. தமிழ் முதலெழுத்துகள்
   1. 30 2. 18 3. 12 4. 247

6. புவி உயிரினங்களுக்கு அளித்த சூழல் தொகுதி
   1. மண் 2. கடல் 3. காடு 4. நாடு

7. அடைமொழியோடு கூடிய பெயர்ச்சொல்
   1. கண்ணன் 2. செய்துவந்தான் 3. தாமரை 4. அழகிய பெண்

8. போர்க்களத்தில் கொட்டும் முரசின் பெயர்
   1. மணமுரசு 2. பிணமுரசு 3. கொடைமுரசு 4. போர்முரசு

9. கயிலைவன்னியன் வன்னியை ஆட்சி செய்த ஆண்டுகள்
   1. 34 2. 54 3. 38 4. 58

10. ஈட்டல் என்ற சொல்லின் எதிர்ப்பொருட் சொல்
    1. இழத்தல் 2. இரவு 3. தேடுதல் 4. விரட்டுதல்

11. கந்தரோடைக்கு நிகரான தலைநகராக வன்னியில் இருந்த பகுதி
    1. பூநகரி 2. யாழ்ப்பாணம் 3. மட்டக்களப்பு 4. கிளிநொச்சி

12. சினங்கொண்டவனை மட்டுமல்லாமல் அவனுடைய உற்றார் உறவினர்கள் அனைவரையும் அழித்துவிடுவது
    1. சினம் 2. கனம் 3. அனல் 4. நஞ்சு

13. அழகுக் கலைக்கு ஒத்த சொல்
    1. நுண்கலை 2. பரதக்கலை 3. அறிவியற்கலை 4. ஓவியக்கலை

14. ஒரே ஒலி இரட்டித்து வருவது, பிரித்தால் பொருள் தராத ஒலிச்சேர்க்கை
    1. இரட்டைக்கிளவி 2. சொல் 3. அடுக்குத்தொடர் 4. ஒற்றைக்கிளவி

15. பின்வருவனவற்றுள் வினையெச்சமாக வருவது
    1. நடந்த 2. ஓடு 3. பாய்ந்து 4. சிரித்தாள்

16. பின்வருவனவற்றுள் பெயரெச்சமாக வருவது
    1. ஆடு 2. பாடிய 3. அழுதாள் 4. எழுது

17. சினங்காத்தலைப் பற்றிக் கூறும் குறளின் அதிகாரம்
    1. வெகுளாமை 2. சினவாமை 3. தீயாமை 4. எரியாமை

18. 'திணை, பால், எண், இடம், காலம்' என்பவற்றைக் கொண்ட சொல்
    1. பெயர்ச்சொல் 2. வினைச்சொல் 3. இடைச்சொல் 4. உரிச்சொல்

19. சிலப்பதிகாரத்தின் உருவாக்கத்திற்கு கருவாக அமைவது
    1. சிலம்பு 2. காப்பு 3. தோடு 4. பாதம்

20. 'சிறிய படகு கரையில் ஒதுங்கியது.' என்ற சொல்லியத்தில் 'சிறிய' என்பது
    1. வினையெச்சம் 2. எழுவாய்அடைமொழி
    3. செயப்படுபொருள் 4. வினைமுற்று

21. 'சிலப்பதிகாரம் முத்தமிழ்க் காப்பியமாகும்.' இச்சொல்லியம்
    1. ஏவற்சொல்லியம் 2. வினாச்சொல்லியம்
    3. மெய்ப்பாட்டுச்சொல்லியம் 4. கூற்றுச்சொல்லியம்

22. சிலப்பதிகாரத்தை எழுதியவர்
    1. சீத்தலைச்சாத்தனார் 2. திருவள்ளுவர்
    3. இளங்கோவடிகள் 4. ஔவையார்

23. குழலி கலகல என்று சிரித்தாள். 'கலகல' என்பது
    1. அடுக்குச்சொல் 2. இரட்டைக்கிளவி
    3. இரண்டுசொல் 4. ஒற்றைக்கிளவி

24. ஒருவன் தன்னைத்தான் காத்துக் கொள்வதற்கு, காக்கவேண்டியது
    1. அழகு 2. விருந்தோம்பல் 3. சினம் 4. சூழல்

25. தனித்து நின்று பொருள் தராத சொல்
    1. பெயர்ச்சொல் 2. வினைச்சொல்
    3. இடைச்சொல் 4. வினைமுற்று

26. காந்தள் என்ற பூவின் இன்னொரு பெயர்
    1. கனகாம்பரப்பூ 2. செவ்வந்திப்பூ
    3. கார்த்திகைப்பூ 4. தாமரைப்பூ

27. சினம் + கொள்ளாதே என்ற சொல்லைப் புணர்த்தி எழுதினால்
    1. சினம்கொள்ளாதே 2. சினக்கொள்ளாதே
    3. சினங்கொள்ளாதே 4. சினத்துக்கொள்ளாதே

28. கந்தன் என்ற சொல்லுடன் ஒரு சொல்லைச் சேர்த்துச் சொல்லியமாக்கினால்
    1. கந்தன் பாடி 2. கந்தன் பாடுகின்ற
    3. கந்தன் பாடிய 4. கந்தன் பாடினான்

29. சிறிய குன்று அருகில் வீடு இருந்தது.' இந்தச்சொல்லியத்தின் காலம்
    1. நிகழ்காலம் 2. இறந்தகாலம் 3. எதிர்காலம் 4. நல்லகாலம்

30. 'வெண்கட்டி' என்ற சொல்லைப் பிரித்தெழுதினால்
    1. வெள்ளை + கட்டி 2. வெண் + கட்டி
    3. வெண்மை + கட்டி 4. வெண்ணை + கட்டி

(30 புள்ளிகள்)

② தமிழ்மொழியில் தரப்பட்டுள்ள பந்தியை வாழிடமொழியில் மாற்றி எழுதுக.

திருவள்ளுவர் தமிழ்நாட்டில் பிறந்தார். இவர் சிறந்த தமிழ்ப்புலவர். இவர் இயற்றிய நூல் திருக்குறள். இதில் 1330 குறள்கள் அமைந்துள்ளன. இக்குறள்கள் மாந்தன் வாழவேண்டிய நல்வழிகளைக் கூறுகின்றன. உலகில் உள்ள எல்லா மக்களுக்கும் பயன்படத்தக்க ஒரு நூலாக இது இருக்கிறது. இதனால் இத்திருக்குறள் பல மொழிகளிலும் மொழிபெயர்க்கப்பட்டுள்ளது. நாம் குறளைக் கற்போம். அதன்படி நடப்போம்.

(10 புள்ளிகள்)

③ பந்தியை வாசித்து அதன் கீழுள்ள வினாக்களுக்கு முழுவிடை தருக.

இயற்கையின் படைப்பில் மிகப் பெரும் விந்தைக்குரியவை இயங்கும் உயிரினங்களே. அவை கண்ணுக்குத் தெரியாத நுண்ணுயிரிகளிலிருந்து பாரிய விலங்குகள் வரை எத்தனை எத்தனை வகையின. ஊர்வன, பறப்பன, ஓடுவன என எத்தனை வகை இயங்கல்கள். மாந்தன் எண்ணிக் கணக்கெடுக்க முடியாதபடி கோடானுகோடி உயிரினங்கள். ஒரு குட்டி பெறுவதிலிருந்து கோடிக் கணக்கான குஞ்சுகள் பொரிப்பது வரை எத்தனை வகை இயல்புகள். வண்ணத்துப் பூச்சிகளும் சோலைப் பறவைகளும் ஓவியம் தீட்டியது போன்ற எத்தகைய அழகிய படைப்புகள். விதம்விதமான படவுருக்களைக் கொண்ட பாம்புகள், மான் போன்ற அழகிய விலங்குகள், மாந்தரைக் கண்டால் விரும்பி நாடி வரும் டொல்பின் மீன்கள். இவற்றையெல்லாம் எண்ணிப் பார்க்கவும் விளங்காத விந்தையான மலைப்புத் தோன்றவில்லையா? சில உயிரிகள் தாம் வாழும் சூழலுக்கு ஏற்பத் தமது நிறத்தையும் உருவையும் கொண்டுள்ளன. எதிரியிடமிருந்து தம்மைக் காத்துக் கொள்ள உருமறைப்புச் செய்யும் ஆற்றலும் சில உயிரிகளுக்கு வழங்கியுள்ளது இயற்கை. சில விலங்குகள் புலால் உண்பவையாகவும் பல இலை, தழை, புல் உண்பனவாகவும் அமைந்துள்ளன. புலால் உண்பவை பிறிதொன்றைக் கொன்று தின்னும் கொடியவை.

1. இயற்கையின் விந்தையான படைப்பு எது?

_______________________________________________

_______________________________________________

2. விலங்குகளின் இயங்கல் வகைகளைக் கூறுக?

_______________________________________________

_______________________________________________

3. ஓவியம் தீட்டியது போன்ற அழகிய சிற்றுயிரிகள் யாவை?

_______________________________________________

_______________________________________________

4. புலால் உண்ணாத இரு விலங்குகள் தருக?

_______________________________________________

_______________________________________________

5. மாந்தரைக் கண்டால் நாடி ஓடிவரும் நீர் விலங்கு எது?

_______________________________________________

_______________________________________________

(10 புள்ளிகள்)

④ பாடலைப் படித்து, வினாக்களுக்கு முழுவிடை எழுதுக.

ஆராரோ ஆரிவரோ
ஆராரோ ஆரிவரோ
ஆரடித்து நீயழுதாய்
அடிச்சாரைச் சொல்லியழு

கண்ணே ஒன்னை யாரடிச்சார்
கண்மணியைத் தொட்டது யார்
பொன்னே ஒன்னை யாரடிச்சார்
பொன்மணியைத் தொட்டது யார்

அத்தை அடிச்சாளோ
அல்லி மலர்ச் செண்டாலே
மாமன் அடிச்சானோ
மல்லிகைப் பூச்செண்டாலே

பாட்டி அடிச்சாளோ
பாலூட்டும் கையாலே
அண்ணன் அடிச்சானோ
அணைத்தெடுக்கும் கையாலே

1. தாலாட்டுப்பாடல் யாருக்கு, எப்பொழுது பாடப்படுகிறது?

_______________________________________________

2. தாலாட்டுப்பாடலில் குறிப்பிடப்படும் உறவுமுறைகள் எவை?

_______________________________________________

3. அத்தை எதனால் அடிக்கிறாள்?

_______________________________________________

4. மாமன் எதனால் அடிக்கிறான்?

_______________________________________________

5. இப்பாடலில் காணப்படும் சுவை எது?

_______________________________________________

(10 புள்ளிகள்)

⑤ பாடநூல் வினாக்கள் ஏழினுள் **ஐந்திற்கு** விடை தருக.

1. ஏழுவகை ஒலிகளையும் குறிப்பதற்கு நம் முன்னோர் பயன்படுத்திய எழுத்துகள் எவை?

2. சிலப்பதிகாரத்தைக் குறிக்கும் வேறு சிறப்புப் பெயர்கள் மூன்று தருக?

3. வன்னி மக்களின் தனித்தன்மை யாது?

4. விபுலானந்த அடிகளினால் ஏதிலி மாணவர் பெற்ற நன்மைகள் இரண்டு தருக?

5. கயிலைவன்னியனுக்கு அஞ்சிப் போர்த்துக்கேயர் எங்கெங்கே கோட்டைகள் கட்டினர்?

6. ஈழத்திலே கண்டறியப்பட்ட பண்டைய தலைநகரங்கள் எவை?

7. தமிழுக்குத் தொண்டு செய்தால் தமிழ் உள்ளவரை வாழ்வேன் என்று யார் யாருக்குக் கூறினார்?

(10 புள்ளிகள்)

⑥ இலக்கணக் கேள்விகள் ஏழினுள் **ஐந்திற்கு** விடை எழுதுக.

1. ‘பார்த்தோம்’ என்ற சொல்லின் திணை, பால், எண், இடம், காலம் என்பவற்றை எழுதுக.

___

___

2. குளத்தில் பறவைகள் மீன்களைக் கொத்திப் பிடிக்கின்றன. இதில் இடம்பெறும் எழுவாய், பயனிலை, செயப்படுபொருளைத் தருக.

___

___

3. மூன்றுகால வினைமுற்றுகளுக்கும் எடுத்துக்காட்டுகள் தருக.

___

___

4. தரப்பட்டுள்ள சொற்களில் பெயரெச்சங்களைத் தெரிந்து எழுதுக.
**நடந்து, செய்த, செய்தான், அழுதாள், ஓடிய, வந்தது, வரும்**

___

___

5. ஷசெல்வி மாலையைக் கட்டி செல்வனுக்குக் கொடுத்தாள்.’ இச்சொல்லியத்தில் வரும் வேற்றுமை உருபுகளை எழுதுக.

___

___

6. ஷநிலா போன்ற முகம்’ இதில் வரும் உவமானம் எது? உவமேயம் எது?

உவமானம்: ______________________ உவமேயம்: ____________________________

7. தரப்பட்டுள்ள சொற்களுக்கு எதிர்ப்பாற்சொல் தருக.

| | | | |
|---|---|---|---|
| இடையன் | ____________________ | இறைவி | ____________________ |
| உழவன் | ____________________ | அரசன் | ____________________ |

(10 புள்ளிகள்)

⑦ தரப்பட்டுள்ள தலைப்புகளில் ஒன்றைத் தெரிந்து, அதன் கீழுள்ள குறிப்புகளின் அடிப்படையில் 125 சொற்களுக்குக் குறையாமல் கட்டுரை எழுதுக.

**1. விருந்தோம்பல்**

- தொண்டைமான் இளந்திரையன்
- பெரும்பாணாற்றுப்படை, சிறுபாணாற்றுப்படை
- திருவள்ளுவர்
- பாவேந்தர்
- சிலப்பதிகாரம்

**2. பாடசாலையில் நடைபெற்ற 20 வது ஆண்டுவிழா பற்றி எழுதுக.**

**3. கயிலைவன்னியன்**

- வீரஞ்செறிந்த ஆட்சி
- ஏழுபற்றுகள்
- ஆட்சிப்பரப்பு - நட்பு
- கோட்டைகள்

**4. எனது தாயகம்**

- இலங்கையின் ஆதி இனம்
- ஐரோப்பியரின் ஆட்சிக்காலங்கள்
- தமிழரசு, சிங்களஅரசு பற்றிய செய்திகள்
- இன்றைய தேசிய இனங்கள்
- தமிழரின் விடுதலையுணர்வு

**5. மோசிகீரனாரின் கதையைச் சுருக்கமாக எழுதுக**

**6. இலைதளிர் காலம்**

- தொடக்க காலம்
- காலநிலையும் சிறப்பும்
- உயிரினங்களின் மகிழ்வு
- பருவ மாற்றங்கள்
- இயற்கையின் அழகுத் தோற்றம்

(20 புள்ளிகள்)